# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

இந்து மதத்திற்கென்று, அதிலும் வைணவத்திற்கென்று தனித்தத்துவங்கள் நிறைய உண்டு. அதில் ஒன்றுதான் பகவானுடைய பெயர்களுக்கென்று கொடுக்கப் பட்டுள்ள முக்கியத்துவம் முஸல்மான கடவுளை அல்லா என்றழைக்கிறான். அவன் அரபு மற்றும் பாரசீக மொழிகளில் வல்லவனாய் இருந்தால், இன்னும் நான்கைந்து பெயர்கள் சொல்லி அழைப்பான். அவ்வளவுதான். இறைவனுக்கு நூற்றுக் கணக்கில் அல்லது ஆயிரக் கணக்கில் நாமங்கள் சூட்டி வழிபடுவது அங்கே இல்லை. அங்கே மட்டுமென்ன ஏறக்குறைய உலகின் எல்லா மதங்களிலும் அப்படித்தான்.

ஆனால் நம் வைதிக மதத்தில் பகவானுக்கு ஆயிரக் கணக்கில் நாமங்கள் உண்டு என்பது மட்டுமல்ல. நாம உச்சாரண வழிபாட்டு முறை என்று ஒரு தனி மார்க்கமே உண்டு. பிள்ளைலோகாசார்யார் தம் முமுக்ஷுப்படியிலே 'திரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே' என்கிறார். திருநாமம் எல்லா அபேக்ஷிதங்களையும் கொடுக்கும் என்கிறார். பெயர் என்பது ஒருவரை குறிக்கவோ அழைத்துப் பேசவோ மட்டுமே பயன்படும் என்கிற சாதாரண எல்லையைத் தாண்டி பெயருக்கே பகவத் மஹிமை உண்டு என்பது வைணவம். இந்த நுட்பமான தத்துவம் பாரத தேசத்தின் வெளிப் புறம் உள்ள மற்ற நாட்டு ஆன்மீகத்துக்குப் புதுமையானது; புரிந்து கொள்ள முடியாதது.

அஜாமிளன் என்ற ஒருவன் சாகும் போது தன் மகன் பெயரைச் சொல்லி நாராயணா என்று அழைத்தான். அத்தோடு உயிர் துறந்தான். சாகும்போது நாராயண நாமம் உச்சரித்தற்காக அவன் ஸ்ரீ வைகுண்டம் சென்றான் என்றும், அவன் செய்த கோடானுகோடி பாவங்களும் மன்னிக்கப் பட்டன என்றும் வைணவ சாத்திரம் கூறுகிறது. ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு வீட்டை ஐந்து ரூபாய்க்கு விற்பது போல ஞானத்தாலும், தவத்தாலும் கடுமையான பிரார்த்தனைகளாலும், அடையக் கூடிய மோட்சம் இப்படி உணர்வின்றிச் சொன்ன அந்திம உச்சாரணத்தால் கிடைத்தது என்று வைணவம் கூறுகிறது.இதிலே பகவத் நாமாவுடைய மஹிமை மட்டுமல்ல. இப்படி ஏற்பாடு செய்த இறைவனுடைய மகத்தான கருணையும் புலப்படுகிறது.

மரணப்படுக்கையில் இருந்த பீஷ்மர், தான் கடைப்பிடிக்கும் தர்மங்களில் மிகச் சிறந்த தர்மமாக நாம உச்சாரணத்தைச் சொல்லுகிறார். விஷ்ணு ஸஹஸ்ரநாமம் என்ற அரிய நூல் அவரால் தான் அந்த சந்தர்ப்பத்தில் வெளியிடப்பட்டது. ஸஹஸ்ரநாமங்களின் மஹிமையால் போகாத பாவம் இல்லை. அடைய முடியாத பேறில்லை என்கிறார் பீஷ்மர்.

நாமங்களைச் சொல்லும் போத சிறிது சொற் சிதைவு ஏற்பட்டாலும் பாதகமில்லை என்கிறது வைணவம். நாராயண: என்று விஸர்க்கத்தோடு இருக்கிற இந்த நாமத்தை

திருமங்கையாழ்வார் நாராயணா என்னும் நாமம் என்று தமிழ்ப்படுத்துகிறார். அதனால் பலன் குறைவுபடாது என்கிறார். நாம மஹிமையால் பலப்பல சாதனைகள் செய்தவரல்லவா அவர்! ராம: என்று இருக்கும் வடமொழி நாமத்தை ராமன் என்று தமிழிலும், ராமுடு என்று தெலுங்கிலும், ராம் என்று இந்தியிலும் சொல்லி அந்தந்த சமுதாயத்தில் பிறந்த மஹான்கள் பலன் அடைந்து காட்டி இருக்கிறார்கள்.

'சொல்லும் க்ரமம் ஒழியச் சொன்னாலும், தன் ஸ்வரூபம் கெட நில்லாது' என்கிறார் முமுக்ஷுப்படி ஆசிரியர். அதாவது கிரமம் இல்லாமல் சொன்னாலும் கூட இது பலன் அளிக்கும் என்கிறார் அவர். அறியாமல் தொட்டாலும் அக்னி நம்மைப் பொசுக்குவது போல வெறும் வாயளவில் சொன்னாலும் கூட பகவானுடைய நாமங்கள் பலன் தருபவை.

பகவானுடைய நாமாக்களை, பிள்ளைகளுக்கு பெயராகச் சூட்டும் காரணம் அதுதான். அவர்களை அழைக்கும் போது, அந்த நாமங்களை நம்மை அறியாமல் நாம் உச்சரிக்கும் பேறு பெறுகிறோம் அல்லவா? ஒரு கிருஹஸ்தன் தன் பிள்ளைகளுக்கு ஆழ்வாருடைய பெயர்களைச் சூட்டி இருந்தான். அந்தப் பெயர்களைச் சொல்லி அவர்களை வாய் நிறைய அழைக்கும் போது அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வாமி ராமாநுஜர் சந்யாசியாகிய தனக்கு இப்படி ஒரு வாய்ப்பில்லையே என்று ஏங்கியதாகக் கூட ஒரு வரலாற்றுச் செய்தி உண்டு.

வாசக ப்ரபாவம் என்றும், வாச்ய ப்ரபாவம் என்றும் இரண்டு தலைப்பிட்டு, பகவான் மஹிமை பெரியதா அல்லது பகவானுடைய நாமத்தின் மஹிமை பெரியதா என்று தர்க்கங்கள் எல்லாம் வைணவத்தில் உண்டு. அதாவது பகவானைக் காட்டிலும் அவனுடைய நாமங்கள் கொடை அருள்பவை என்ற கொள்கை தான் அது. இப்படி ஒரு கொள்கையை உலகின் மற்ற மதங்களில் நம்மால் காண இயலாது. இப்படிக் கொள்கை ஏற்படக் காரணம் இறைவனுடைய கருணை தான். கோவிலுக்குப் போய் பகவானை தரிசிக்க வேண்டும் என்றால் குளிக்க வேண்டும், தீட்டில்லாமல் இருக்க வேண்டும். ஆசார அனுஷ்டானங்களோட செல்ல வேண்டும். பகவானுடைய நாமங்களைச் சொல்வதற்கு இந்த நியமனங்கள் இல்லை

கோவிந்தா என்றழைத்து திரௌபதி சேலை பெற்றபோது அவள் மாதவிலக்காய் இருந்தாள். அழுக்கும். அநாசாரமும் பகவந் நாமாவைச் சொல்லுவதற்கு தடையாக மாட்டா. கர்ப்ப கிருஹத்திற்கு செல்வதற்கு சில வருணத்தாருக்கு மட்டுமே உரிமை உண்டு. ஆனால் நாம உச்சாரணத்துக்கு வர்ணாச்ரம விதிகள் இல்லை. ஆண், பெண், சண்டாளன் என அனைவருக்கும் இதற்கு அனுமதி உள்ளவர்கள் பகவத் தரிசனம் நடந்த சென்று பார்ப்பவர்களுக்கு மட்டுமே பலன் தரும், நாம உச்சாரணம் இருந்த இடத்திலேயே பலன் தரும்.

இப்படி இருக்கும் போது வீட்டிலே இருக்கும் புதையலை வெளியே தூக்கி எறிந்து விட்டு குப்பையில் உள்ள குன்றிமணியை எடுத்துச் சேமிக்கும் அறிவிலிகள் போல இன்று வைணவக் குடும்பங்களில் குழந்தைகளுக்கு வைணவப் பெயர் சூட்டாமல் பலவித நவநாகரீகப் பெயர்களைச் சூட்டி நாம உச்சாரண பலன்களை இழக்கிறார்கள். புதுமைப் பாதையை கடைப் பிடிப்பது தவறில்லை. ஆனால் அது பழைமை நெறி போல பயன் தருமா என்று சிந்திக்க வேண்டும்.